# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

### இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
### நான்காம் பருவம்

### நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)

### ஜூலை–ஆகஸ்ட் – 2022
### P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தண்டியலங்காரம் காப்பியத்தை எவ்வாறு வகைப்படுத்துகிறது?
2. சேக்கிழாரை ஆதரித்த மன்னர் யார்?
3. சிந்தாமணி என்றால் என்ன?
4. திண்ணனாருக்கு எத்தனை நாட்களில் இறைவன் காட்சி தந்தார்?
5. சூளாமணிக் காப்பியத்தின் ஆசிரியர் யார்?
6. "வீரத்தாய்" காவியம் எடுத்துரைக்கும் கருத்து யாது?
7. பாரதிதாசன் இயற்றிய மூன்று கவிதைக் காவியங்களைக் குறிப்பிடுக.
8. மாங்கனியின் காதலன் யார்?
9. சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாக விளங்கிய நூல் எது?
10. திருமுருகாற்றுப்படைக்கு அமைந்த வேறு பெயர்கள் எவை?
11. நிலம் நலம் பெற எவர் நல்லவர்களாக இருக்க வேண்டும்?
12. வேதங்களை முறையாகக் கற்ற சேரன் யார்?
13. ஏறு தழுவலைக் குறிக்கும் அகநூல் எது?
14. கொண்கன் என்பது யாரைக் குறிக்கும்?
15. ஆடவர்க்கு உயிர் எது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. ஐம்பெருங் காப்பியங்கள் எவை?
2. இந்திர விழா நடத்தப்படும் போது புகார் நகரத்தை எவ்வாறு அழகுபடுத்த வேண்டும்?
3. இயற்கை வருணனை சூளாமணியில் எவ்வாறு அமைக்கப் பெற்றுள்ளது?
4. பெண்களைப் பற்றிச் சேனாதிபதியின் கருத்து யாது?
5. பாலை நிலம் எவ்வாறு உருவாவதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது?
6. பொருநர் பாலை யாழை மீட்டிப் பாலைப்பண் பாடும்போது என்ன நிகழும்?
7. குறிஞ்சித் திணையின் முதல், உரிப்பொருளை எழுதுக.
8. பண்டமாற்று என்றால் என்ன?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மணிமேகலை கூறும் இந்திர விழா குறித்து கட்டுரை தருக.

(அல்லது)

(ஆ) கண்ணப்ப நாயனார் பற்றி கட்டுரைத் தருக.

2. (அ) பாரதியின் பாஞ்சாலி சபதம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) முச்சங்கங்கள் குறித்து கட்டுரை வரைக.

3. (அ) பதிற்றுப்பத்தைப் பாடிய புலவர்களைப் பற்றிய செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நெய்தல் திணைப்பாடல்களின் இலக்கிய நயங்களை ஆராய்க.

****